ARUNODHAYA Children Sangam

அருணோதயா குழந்தைகள் சங்க கூட்டமைப்பு

# சிட்டெறும்பு பேசுது

உயிர் : 04
குரல் : 02

ஏப்ரல் 2026 – ஜூன் 2026

*தனிச் சுற்றுக்கு மட்டும்

## விளையாடுவது எங்கள் உரிமை






அருணோதயா
குழந்தை தொழிலாளர் மையம்

# சிட்டெறும்பு பேசுது

உயிர் : 04 | குரல் : 02

ஏப்ரல் – ஜுன் 2026

ஆசிரியர்கள்

K.நிஷாந்த் , P.பாவனா, Y.யாஷ்மின்கான்,
K.சபரீஸ்வரன், P.உதயபிரியன்

இணை ஆசிரியர்கள்

A.சஞ்சய், I.ஐஸ்வரியா, B. யஷ்வந்த்,
R.சாதனா ஸ்ரீ, K.தேவ் பிரசாத்,
M.அன்சிகா,

நிருபர்கள்

K. ஹேம்ராகுல், K. கயல், C. நவீன் சந்தர்,
S. பூஜா ஸ்ரீ, J. சஞ்சனா ஸ்ரீ, S.முபாரக்,
J. கௌதம், C. மானசிரினி,

ஓவியர்கள்

H. சக்திராஜன் , S.தர்ஷன், D.கவியரசன்,
C. தன்ஷிகா,

நிர்வாகம்

முனைவர்.வர்ஜில் டி சாமி
நிர்வாக இயக்குநர்

ஒருங்கிணைப்பு

திருமதி. செ. செல்வி
குழந்தை பங்கேற்பு கருத்தியல் வழிநடத்துனர்

வழிநடத்துனர்

திருமதி. E. மாலா
உறுப்பினர், விதை நெல்

வடிவமைப்பு

K. நிஷாந்த், C. மானசிரினி, H. சக்திராஜன்,
வடிவமைப்பில் உதவி. திரு. G. டான்போஸ்கோ,

தொடர்பு முகவரி

அருணோதயா குழந்தை தொழிலாளர் மையம்
19/9/2, பஜார் தெரு. இராயபுரம்
சென்னை – 600013
**Phone** : 044-42632264
**Mobile** : 9444051529, 8925274527

மின்னஞ்சல்

arunodhayaorg@gmail.com

இணையதளம்

www.arunodhayacentre.in




## ஆசிரியர் உரை

அன்புள்ள எனது நண்பர்கள் அனைவருக்கும் வணக்கம்…

இன்றைய காலக்கட்டத்தில் விளையாட்டு என்பது நம் அனைவரின் வாழ்வில் இருந்து அழிக்கப்பட்டு வருகிறது. இதற்கு பல காரணங்கள் உள்ளன. இதில் குறிப்பாக நம் பகுதியில் விளையாடுவதற்கான வசதிகள் இல்லாமல் இருப்பதும், நாம் வாழும் பகுதியில் குழந்தைகளுக்கான பாதுகாப்பு இல்லாமல் இருப்பதும், சில சமயங்களில் நமக்கே விளையாட்டில் ஆர்வம் இல்லாமல் இருப்பதும், மேலும் வளர்ந்து வரும் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி என பல காரணங்கள் கூறலாம். விளையாட்டு என்பது குழந்தைகளாகிய நம்முடைய வாழ்வில் மிக முக்கியமானது என்பதை நாம் மறந்துவிடுகிறோம். நாம் விளையாடுவதன் மூலம் நம் வாழ்வில் பல மாற்றங்களை ஏற்படுத்த முடியும். குறிப்பாக உடல் ஆரோக்கியம், மனஉறுதி, ஒழுக்கம், தலைமைத்துவம், தன்னம்பிக்கை என பல வளர்ச்சியை ஏற்படுத்த உதவும். இருப்பினும் இதை நாம் மறந்து வெளியே சென்று விளையாடும் வழக்கத்தை விடுத்து வீட்டிற்குள்ளேயே கைபேசியுடன் விளையாடும் வழக்கம் நம்மிடம் அதிகரித்துள்ளது. இதனால் தான் நமது பாரம்பரிய விளையாட்டுகள் மறக்கப்பட்டும், அழிக்கப்பட்டும் வருகிறது. நமது உடலை சுறுசுறுப்பாக வைத்திருக்க ஊக்குவிக்கும் பல விளையாட்டுகள் படிப்படியாக மறைந்து வருகிறது. இந்த நிலைமாறி விளையாட்டின் அவசியத்தினை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு ஆண்டும் ஜீன் 11ஆம் தேதி சர்வதேச விளையாட்டு தினம் கடைபிடிக்கப்படுகிறது. இந்த நாளின் முக்கிய நோக்கம், ஒவ்வொரு குழந்தைக்கும் விளையாடுவதற்கான உரிமை உள்ளது. குழந்தைகளின் வளர்ச்சியில் விளையாட்டின் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பதுமாகும். எனவே நாம் அனைவரும் இந்நாளிலிருந்து விளையாட்டிற்கு முக்கியத்துவம் கொடுத்திட வேண்டும். எனவே நாம் அனைவரும் ஒன்றிணைந்து.

ஓடி ஆடி விளையாடுவோம்!
நம் உடலையும் மனதையும் உறுதியாக
வைத்திருப்போம்!

என்னும் உறுதிமொழியை ஏற்போம். மேலும் இப்புத்தகத்தில் எங்களுக்கு தெரிந்த சில விளையாட்டுகள் குறித்த தகவல்களை திரட்டி அதன் விளக்கம் மற்றும் சிறப்புகளை தொகுத்து உங்களுக்காக கொடுத்துள்ளோம். இதன் வாயிலாக நம்முடைய பாரம்பரிய விளையாட்டுகளை அழிக்கவிடாமல் பாதுகாக்க முடியும் என நம்புகிறோம். எனவே குழந்தைகளாகிய நாம் அனைவரும் கைபேசியை விடுத்து ஓடி, ஆடி வியர்வை சிந்தி விளையாட வேண்டும். அப்போது தான் விளையாடுவதால் நம் உடலில் ஏற்படும் மாறுதலை நம்மால் உணரமுடியும் வளமான, ஆரோக்கியமான வாழ்க்கையை வாழவும், மேலும் குழந்தை பருவத்தை மகிழ்வுடனும் வளமுடனும் அனுபவிக்கவும் நாம் அனைவரும் கட்டாயம் விளையாடவேண்டும்.

ஆரோக்கியமாக வாழ்வோம்!
சாதனைகள் பல படைப்போம்!



P. பாவனா
17 வயது, திருவொற்றியூர்

# அருணோதயா குழந்தைகள் சங்க கூட்டமைப்பு செயல்பாடுகள்

(ஏப்ரல் – ஜுன் 2026)

## குழந்தைகள் சங்க மூன்று மாத செயல்பாடுகள்

| வ.எண் | மாதம் | பேசப்பட்ட கருத்துகள் |
|---|---|---|
| 1 | ஏப்ரல் | • குழந்தைகள் சங்க கூட்டமைப்பு கூட்டம்<br>• சட்டமன்ற தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை சந்தித்து கோரிக்கைகள் கொடுத்தல்<br>• பங்கேற்பு உரிமைக்கான குழந்தைகள் இயக்கங்களின் கூட்டமைப்பின் பொதுக்குழு கூட்டம்<br>• சிட்டெறும்பு பேசுது ஆசிரியர் குழு கூட்டம்<br>• இளம் வழிநடத்துனர் பயிற்சி<br>• குழந்தை உழைப்பு எதிர்ப்பு தினம் |
| 2 | மே | • குழந்தைகள் சங்க ஒரு நாள் திட்டமிடல் பயிற்சி முகாம்கள்<br>• FCMRP- இளம் வழிநடத்துனர் பயிற்சி<br>• பங்கேற்பு உரிமைக்கான குழந்தைகள் இயக்கங்களின் கூட்டமைப்பு – மாநில மாநாடு 2026 |
| 3 | ஜீன் | • உலக குழந்தை தொழில் முறை ஒழிப்பு தினம்<br>• குழந்தைகள் சங்க கூட்டமைப்பு செயற்குழு கூட்டம்<br>• குழந்தைகள் சங்க கூட்டமைப்பு கூட்டம்<br>• இதழியல் பயிற்சி முகாம் |

## ஏப்ரல்

**ஏப்ரல் 4** அருணோதயா குழந்தைகள் சங்க கூட்டமைப்பு கூட்டம் கொருக்குப்பேட்டை மண்டல அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் 50 குழந்தைகள் பங்கேற்றனர். இக்கூட்டத்தில் மே மாதத்தில் நடைபெற உள்ள திறன் வளர்ப்பு பயிற்சி முகாம்கள் குறித்து திட்டமிடப்பட்டது. சிட்டெறும்பு பேசுது (ஜனவரி-மார்ச் 2026) இதழுக்கான தலைப்பும் முடிவெடுக்கப்பட்டது.

**ஏப்ரல் 9** இராயபுரம், கொருக்குப்பேட்டை, தண்டையார்பேட்டை, எண்ணூர் மற்றும் திருவொற்றியூர் மண்டலத்தில் உள்ள நமது சங்க குழந்தைகளின் உரிமைகள் மற்றும் பகுதியில் உள்ள குழந்தைகள் சங்க நோக்கத்தினை அடிப்படையாக கொண்டு தயாரிக்கப்பட்ட சட்டமன்ற தேர்தல் 2026 குழந்தைகளின் கோரிக்கைகளை தேர்தலில் போட்டியிடும் கட்சி வேட்பாளர்களை சந்தித்து கொடுத்தனர்.

**ஏப்ரல் 18** பங்கேற்பு உரிமைக்கான குழந்தைகள் இயக்கங்களின் கூட்டமைப்பின் பொதுக்குழு கூட்டம் இணையதளம் வழியாக நடைபெற்றது. 11 மாவட்டங்களிலிருந்து 24 குழந்தைகள் பங்கேற்றனர். இதில் முக்கிய கருப்பொருளாக FCMRP கூட்டமைப்பின் 9வது மாநில மாநாட்டின் கருப்பொருள் முடிவு எடுக்கப்பட்டது. பின்பு மாநாட்டின் தொடர் செயல்பாடுகள் பற்றியும், அடுத்த கூட்டம் குறித்தும் திட்டமிடப்பட்டது.

**ஏப்ரல் 19** சிட்டெறும்பு பேசுது ஆசிரியர் குழு கூட்டம் நமது திருவொற்றியூர் மண்டல அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் 17 குழந்தைகள் பங்கேற்று ஜனவரி – மார்ச் 2026 புத்தகத்தின் தளவமைப்பு குறித்து விவாதம் செய்யப்பட்டது.



ஏப்ரல் 24 முதல் 26 இளம் வழிநடத்துனர் பயிற்சி முகாம் அடையாரில் உள்ள இளையோர் விடுதியில் நடைபெற்றது. இப்பயிற்சியில் 37 குழந்தைகள் பங்கேற்றனர். இதில் முக்கிய தலைப்பாக குழந்தைகள் உரிமைகள், குழந்தைகள் பங்கேற்பு, குழந்தைகளுக்கான நிதி ஒதுக்கீடு குறித்து குழந்தைகளுக்கு பயிற்சி கொடுக்கப்பட்டது. இளம் வழிநடத்துனரின் திறன்கள் தகுதிகள் கண்டறிந்து இளம் வழிநடத்துனராக 23 குழந்தைகள் தேர்ந்தெடுக்கபட்டனர். இதன் தொடர் செயல்பாடாக ஒரு நாள் திட்டமிடல் பயிற்சி முகாம் குறித்த திட்டமிடலும் நடைபெற்றது.




ஏப்ரல் 30 குழந்தை உழைப்பு எதிர்ப்பு தினத்தையொட்டி திருவொற்றியூர், எண்ணூர், கொருக்குப்பேட்டை ஆகிய அனைத்து மண்டலத்திலும், பேரணி மற்றும் குழந்தைகள் கருப்பு ரிப்பன் அணிந்தும், பகுதிகளில் கள ஆய்வு மேற்கொண்டும், குழந்தை உழைப்பு எதிர்ப்பு குறித்து அனைத்து மக்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள். இந்த செயல்பாடுகளை புகைப்படம் எடுத்து ஆவணப்படுத்தினார்கள். மேலும் குழந்தை தொழிலிருந்து மீட்டெடுத்து பள்ளியில் சேர்க்கப்பட்ட நிகழ்வை அடிப்படையாக கொண்டு, கல்வி மற்றும் குழந்தை பாதுகாப்பின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டும் விதமாக ஒரு குறும்படமும் குழந்தைகள் தயாரித்தனர்.



## மே

மே 6 - 15 ஒரு நாள் திட்டமிடல் பயிற்சி முகாம் அனைத்து மண்டலங்களிலும் நடைபெற்றது. இப்பயிற்சியில் குழந்தை உரிமைகள், குழந்தைகள் பங்கேற்பு, தலைமைத்துவ பண்புகள் மற்றும் குழந்தைகளுக்கான நிதி ஒதிக்கீடு குறித்த தகவல்கள் கொடுக்கப்பட்டது. இந்த தகவலின் அடிப்படையில் குழந்தைகள் சங்கத்தின் 2026 ஆண்டிற்கான ஆண்டு செயல் திட்டமும் உருவாக்கப்பட்டது.



மே 19 FCMRP கூட்டமைப்பின் 9வது மாநில மாநாட்டிற்கான இளம் வழிநடத்துனர் பயிற்சி இணையதளம் வழியாக நடைபெற்றது. இப்பயிற்சியில் இணையத்தில் பாதுகாப்பாக இணைவது எங்கள் உரிமை எனும் தலைப்பில் திருமிகு. ஜோசப் (CCRD) அவர்களும், எளிதமைப்பாளர்களின் திறன்கள் குறித்து திருமிகு. ஆரோக்கியம் (சக்தி - விடியல்) அவர்கள் இளம்வழிநடத்துனரின் பொறுப்புகள் மற்றும் கடமைகள் எனும் தலைப்பில் திருமதி.மாலா (FCMRP – முன்னாள் உறுப்பினர்) அவர்களும் குழந்தைகளுக்கு பயிற்சி அளித்தனர். இறுதியாக இப்பயிற்சி குழந்தைகளுடன் விவாதித்து தெளிவான விளக்கத்தினை முனைவர். வர்ஜில் டி' சாமி (FPCP– மாநில அமைப்பளர்) அவர்கள் வழங்கினார்.

**மே** 27,28 ஆகிய நாட்களில் FCMRP– 9வது மாநில மாநாடு நடைபெற்றது. இதில் அருணோதயா குழந்தைகள் சங்க கூட்டமைப்பின் சார்பாக துணைபொருளாளர் செல்வி. யுவராணி, பொதுக்குழு உறுப்பினர் செல்வன். சபரிராஜன், இளம் வழிநடத்துனர் செல்வி. ஆயிஷா பாத்திமா, செல்வன். நிஷாந்த் ஆகியோர் பங்கேற்றனர். இணையத்தில் பாதுகாப்பாக இணைவது எங்கள் உரிமை என்னும் தலைப்பில் இம்மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டில் 14 மாவட்டங்களில் இருந்து 35 குழந்தைகள் பங்கேற்றனர்.



## ஜூன்

**ஜீன்** 12 உலக குழந்தை தொழில்முறை எதிர்ப்பு தினத்தன்று குழந்தைகள் சங்க குழந்தைகள் அனைத்து பகுதிகளிலும் பேரணி, வீதிநாடகம் போன்ற விழிப்புணர்வு நிகழ்வு நடத்தினார்கள். இதில் 400 குழந்தைகள் பங்கேற்று பகுதி மக்கள், பெற்றோர்களுக்கு குழந்தை தொழிலாளர்களுக்கு ஏற்படும் பிரச்சனைகள் குறித்து விழிப்புணர்வினை ஏற்படுத்தினார்கள்.

**ஜூன்** 18 அருணோதயா குழந்தைகள் சங்க கூட்டமைப்பு செயற்குழு கூட்டம் நடைபெற்றது. இதில் கூட்டமைப்பு கூட்டம் குறித்தும் இதழியல் பயிற்சி குறித்த திட்டமிடலும் நடைபெற்றது. FCMRP - கூட்டமைப்பின் புதிய உறுப்பினர்கள் தேர்ந்தெடுப்பது குறித்தும், அவர்களின் பொறுப்புகள் மற்றும் கடமைகள் குறித்த விவாதமும் நடைபெற்றது.



**K.. நிஷாந்த்**
17 வயது, எண்ணூர்

**ஜீன்** 19 அருணோதயா குழந்தைகள் சங்க கூட்டமைப்பு கூட்டம் நடைபெற்றது. இதில் 45 குழந்தைகள் பங்கேற்றனர். இக்கூட்டத்தில் இளம் வழிநடத்துனர் பயிற்சி முகாம் குறித்து மதிப்பீடு செய்யப்பட்டது. பின்னர் தேர்வு செய்யப்பட்ட இளம் வழிநடத்துனர் தங்களின் அனுபவங்களை பகிர்ந்து கொண்டார்கள். மேலும் சிட்டெறும்புபேசுது (ஏப்ரல்-ஜீன் 2026) இம்மாதத்திற்கான புத்தகத்தின் தலைப்புகள் முடிவெடுக்கப்பட்டது. FCMRP- கூட்டமைப்பின் புதிய உறுப்பினர்களாக செல்வன். யுவராஜ், செல்வி. ஐஸ்வர்யா தேர்வு செய்யப்பட்டனர்.

**ஜீன்** 26,27 இதழியல் பயிற்சி முகாம் திருப்போரூரில் உள்ள பயிற்சி மையத்தில் இரண்டு நாட்கள் நடைபெற்றது. பயிற்சியில் 27 குழந்தைகள் பங்கேற்றனர். இப்பயிற்சியில் ஊடகம் என்றால் என்ன? ஊடகம் எத்தனை வகைப்படும்? ஊடகத்தின் வரலாறு, கதை எழுதுதல், நேர்காணல் எடுத்தல், புத்தகத்தின் வடிவம், கற்பனை கதை, எழுத்து நடை போன்ற தலைப்புகளில் கதை, கட்டுரை, ஓவியம், பட்டிமன்றம் மூலம் ஒரு புத்தகத்தின் முக்கியத்துவத்தினை புரியும் விதமாக குழந்தைகளுக்கு பயிற்சியாளர் திரு.சரவணன் (பத்திரிக்கை ஆசிரியர்) பயிற்சி அளித்தார். இப்பயிற்சியின் இறுதியில் புதிய ஆசிரியர் குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.



# ஒரு நாள் திட்டமிடல் பயிற்சி முகாம்

அருணோதயா குழந்தைகள் சங்க கூட்டமைப்பின் ஒரு நாள் திட்டமிடல் பயிற்சி முகாம் மே 6 முதல் 15ம் தேதி வரை நடைபெற்றது. எண்ணூர், இராயபுரம், திருவொற்றியூர், கொருக்குப்பேட்டை ஆகிய மண்டலத்தில் மொத்தமாக 82 முகாம்கள் நடைபெற்றது.

இப்பயிற்சியில் ஆண் - 894, பெண் - 554 என மொத்தம்: 1448 குழந்தைகள் பயிற்சி பெற்றனர். இந்த ஆண்டு இளம் வழிநடத்துனர் பயிற்சியில் 23 புதிய இளம் வழிநடத்துனர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.இவர்கள் குழந்தைகள் சங்க உறுப்பினர்களுக்கு குழந்தை உரிமை, குழந்தை பங்கேற்பு, தலைமைத்துவ பண்புகள் மற்றும் குழந்தைகளுக்கான நிதி ஒதிக்கீடு குறித்த தகவல்களை பயிற்சி அளித்தனர்.

இதனை தொடர்ந்து குழந்தைகள் பெற்ற தகவலின் அடிப்படையில் குழந்தைகள் சங்கத்தின் 2026 ஆண்டிற்கான செயல் திட்டமும் குழந்தைகள் திட்டமிட்டனர்.





**B. யஷ்வந்த்**
16 வயது, எண்ணூர்

# நல்லதை படிப்போம் ! நல்லதை பகிர்வோம் !
# விளையாட்டின் வரலாறு

விளையாட்டுகள் மனித நாகரீகம் தோன்றிய காலத்திலிருந்தே மனித வாழ்க்கையின் ஒரு முக்கிய அங்கமாக இருந்து வருகின்றன. ஆரம்பகால மனிதர்கள் வேட்டையாடுதல், ஓடுதல், கல் எறிதல், நீந்துதல் போன்ற அன்றாட செயல்களை பயிற்சி செய்வதற்காக விளையாட்டுகளில் ஈடுபட்டனர்.

காலப்போக்கில் உடல்திறன், மனத்திறன், பொழுது போக்கு, மற்றும் போட்டித்திறனை உருவாக்கும் விளையாட்டாக உருவெடுத்தன. பண்டைய நாகரீகங்களாக எகிப்து, கிரேக்கம், ரோம், இந்தியா, மற்றும் சீனா போன்ற நாடுகளில் பல்வேறு விளையாட்டுகள் தோன்றி வளர்ச்சி பெற்றன.

கிரேக்கத்தில் கி.மு776 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட ஒலிம்பிக் போட்டிகள் உலக விளையாட்டு வரலாற்றில் முக்கிய மைல் கல்லாக கருதப்படுகின்றன.

இந்தியாவில் கபடி, கோ-கோ, சதுரங்கம், கில்லி, சிலம்பம், போன்ற பாரம்பரிய விளையாட்டுகள் பல நூற்றாண்டுகளாக விளையாடப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டிலும் சடுகுடு(கபடி), பல்லாங்குழி, தாயம், சிலம்பம், உறியடி போன்ற விளையாட்டுகள் மக்களின் வாழ்க்கையுடன் இணைந்திருந்தன. இன்றைய காலத்திலும் விளையாட்டுகள் சர்வதேச அளவில் பல விதிமுறைகளை உருவாகி விளையாடப்படுகிறது.

உடல்நலம், ஒழுக்கம், ஒற்றுமை, குழு உணர்வு, தலைமைத்துவம் மற்றும் நட்புறவை வளர்க்கும் சிறந்த விளையாட்டுகளாக முக்கியத்துவம் பெற்றுள்ளன. எனவே விளையாட்டுகள் மனிதனின் முழுமையான வளர்ச்சிக்கு இன்றியமையாத ஒன்றாக கருதப்படுகின்றது. இதுவே விளையாட்டின் வரலாறு ஆகும்.



**P. உதயபிரியன்**
00 ஆம் வகுப்பு. கொருக்குப்பேட்டை

# கவர்ஸ்டோரி

## சர்வதேச விளையாட்டு தினம்

சர்வதேச விளையாட்டு தினம் ஒவ்வொரு ஆண்டும் ஜீன் 11ஆம் தேதி உலக முழுவதும் கடை பிடிக்கப்படுகிறது. இந்நாளின் முக்கிய நோக்கம், ஒவ்வொரு குழந்தைக்கும் விளையாடுவதற்கான உரிமை உள்ளது என்பதை வலியுறுத்துவதும், குழந்தைகளின் வளர்ச்சி விளையாட்டின் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பதுமாகும்.

சர்வதேச விளையாட்டு தினத்தின் முக்கியத்துவம்

- உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது.
- குழந்தைகளின் சிந்தனை மற்றும் கற்றல் திறனை வளர்கிறது.
- நட்பு, ஒற்றுமை மற்றும் குழு உணர்வை உருவாக்குகிறது.
- மகிழ்ச்சி மற்றும் மனநலத்தை மேம்படுத்துகிறது.
- குழந்தைகளின் படைப்பாற்றல் மற்றும் கற்பனைத் திறனை ஊக்குவிக்கிறது.
- தொடர்பு மற்றும் சமூகத் திறன்களை வளர்கிறது.
- குழந்தைகளின் முழுமையான வளர்ச்சிக்கு விளையாட்டு உதவுகிறது.

**குழந்தைகளுக்கான விளையாட்டின் உரிமை**

விளையாட்டு என்பது வெறும் பொழுதுபோக்கு மட்டுமல்ல அது குழந்தைகள் கற்றுக் கொள்ளவும், சிந்திக்கவும், மற்றவர்களுடன் பழகவும், பிரச்சனைகளைத் தீர்க்கவும், தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளவும் உதவும் ஒரு முக்கியமான வழியாகும். குழந்தைகள் பாதுகாப்பான சூழலில், பாகுபாடின்றி தங்களுக்குப் பிடித்த விளையாட்டுகளில் பங்கேற்க வாய்ப்பு பெற வேண்டும் என்பதே இந்த நாளின் முக்கியச் செய்தியாகும்.

நன்றி ! **chatgpt**





**P. உதயபிரியன்**
17 வயது, கொருக்குப்பேட்டை



# கூடி விளையாடுவோம்...

விளையாடுவதால் ஏற்படும் மாற்றங்களை ஒரு சிறுகதை மூலம் உங்களிடம் பகிர்ந்து கொள்ள விரும்புகிறோம். விளையாட்டு என்பது நம் உடலின் ஆரோக்கியம் மட்டும் இன்றி நம் மனதின் ஆரோக்கியத்திற்கான திறவு கோலாகும்.

எனது தோழி அமிர்தா, அவள் எப்போதும் கணினி விளையாட்டுகளிலும், அலைப்பேசி விளையாட்டுகளிலும் மூழ்கியிருப்பது தான் வழக்கம், பள்ளி விடுமுறை நாட்கள் என்றாலும், வீட்டுக்குள்ளேயே முடங்கி இருப்பாள். இதனால் அவளுக்கு அடிக்கடி தலைவலியும் சுறுசுறுப்பின்மையும் ஏற்பட்டது. படிப்பிலும் கவனம் குறையத் தொடங்கியது. அவளுடைய அப்பா எவ்வளவு எடுத்து சொல்லியும் அவள் கேட்கவில்லை.

ஒரு நாள் அவளுடைய மாமா அவளை அருகில் அழைத்து அமிர்தா! வா நாம் இருவரும் மாலையில் பூங்காவிற்கு சென்று விளையாடலாம் என்று அழைத்தார். அவள் மிகுந்த தயக்கத்துடன் சென்ற அமிர்தா, அங்கு மற்ற குழந்தைகள் ஓடிப்பிடித்து விளையாடுவதை பார்த்தும், பந்து பிடித்து விளையாடுவதையும் கண்டாள்.

அந்த நேரத்தில் அவள் மாமா ஒட்டப்பந்தயம் விளையாட்டினை அறிமுகப்படுத்தினார். அன்று மாலை அவள் ஓடி குதித்து வியர்வை சொட்ட சொட்ட விளையாடினாள். பல நாட்களுக்கு பிறகு அவளுக்குள் ஒரு புதிய புத்துணர்ச்சி தோன்றியது. அன்று இரவு அவளுக்கு நல்ல தூக்கம் வந்தது. மறுநாள் அவள் மீண்டும் விளையாடச் சென்றாள். சில வாரங்களிலேயே அவளுடைய உடல்நிலை மாற்றம் ஏற்பட்டு, தலைவலி மாயமாய் மறைந்து சுறுசுறுப்புடன் தனது வேலைகளைச் செய்ய தொடங்கினாள். அப்போது தான் அமிர்தா உணர்ந்தாள், விளையாட்டு தான் அவளது சிறந்த நண்பன் என்று.

**விளையாடுவதால் ஏற்படும் ஆரோக்கியமான மாற்றம் :**

உடல் உறுதி அடையும், சோம்பேறிதனம் நீங்கி சுறுசுறுப்புடன் செயல்படலாம். விளையாடுவதால் மன அழுத்தம் குறையும், ஞாபகசக்தி அதிகரிக்கும்.

**கதையின் நீதி**

உடல் மற்றும் மன ஆரோக்கியத்திற்கு ஓடி ஆடி விளையாடுவது மிகவும் அவசியம். அலைபேசி விளையாட்டுகளை தவிர்த்து, உடற்பயிற்சி தரும் விளையாட்டுகளில் ஈடுபடுவது உடலை என்றும் இளமையாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருக்கும்.

I. ஐஸ்வரியா
15 வயது. ஆர். ஆர். நகர்





R. சாதனாஸ்ரீ
15 வயது. திருவொற்றியூர்






# நமது பாரம்பரியமான அறிவு திறன் விளையாட்டுகள்

**ஒரு நாள் பள்ளி முடிந்து சில குழந்தைகள் பள்ளி வளாகத்தில் அமர்ந்து பேசிக்கொண்டியிருந்தனர்.**

**நித்தீஷ்வரன்:** நம்முடைய பாரம்பரிய விளையாட்டுகள் இப்போது மறைந்து கொண்டிருக்கின்றது. முன்பெல்லாம் குழந்தைகள் எப்போதும் வெளியில் கூடி விளையாடுவார்கள். இப்போது எல்லோரும் தனிமையில் கைப்பேசியுடன் விளையாடுகிறார்கள் .

**மதுமிதா:** ஆமாம் ! நம்முடைய பாரம்பரிய விளையாட்டுகளில் பொழுதுபோக்கு மட்டுமல்லாமல் உடலுக்கும் மனதுக்கும் பல நன்மைகள் இருக்கின்றன. நேற்று பாட்டி என்னிடம் பல்லாங்குழி விளையாட்டை பற்றி சொன்னார்கள்.

**பாவனா:** பல்லாங்குழி எப்படி விளையாடுவது ?

**மதுமிதா:** பல்லாங்குழி ஒரு மரப்பலகையில் இருபுறமும் குழிகள் அமைந்திருக்கும் புளியங்கொட்டைகள் அல்லது சிறிய விதைகளைப் பயன்படுத்தி விளையாடுவார்கள். விளையாட்டு தொடங்கும் போது ஒவ்வொரு குழியிலும் சமமான எண்ணிக்கையில் விதைகள் வைக்கப்படும். வீரர்கள் மாறி மாறி தங்கள் பக்கத்தில் உள்ள ஒரு குழியில் இருக்கும் அனைத்து விதைகளையும் எடுத்து, அடுத்தடுத்த குழிகளில் ஒவ்வொன்றாக போடுவார். விதைகள் முடியும் இடம் மற்றும் அந்த இடத்தின் விதிமுறைகளுக்கு ஏற்ப விதைகளைச் சேகரிப்பார். சுற்றின் இறுதி முடிவில் அதிக விதைகளைப் பெறுபவர் வெற்றியாளராக அறிவிக்கப்படுவார். இதன் மூலம் கணிதம் மற்றும் எண்ணும் திறன் மேம்படும். நினைவாற்றல், கவனத்திறன் மற்றும் திட்டமிடும் திறன் வளர்கிறது.

**கார்த்திக்:** அப்படியா! நான் பல்லாங்குழி ஆட்டம் விளையாடியதே இல்லை ஆனால் கபடி பற்றி எனக்கு தெரியும்.

**நிஷாந்த்:** கபடி நம் நாட்டின் மிகவும் பிரலமான பாரம்பரிய விளையாட்டுகளில் ஒன்று தானே ?

**கார்த்திக்:** இந்த விளையாட்டில் இரண்டு அணிகள் பங்கேற்கின்றனர். ஒவ்வொரு அணியிலும் பொதுவாக 7 வீரர்கள் களத்தில் விளையாடுவர். ஒரு அணியில் இருந்து ஒரு வீரர் (ரெய்டர்) எதிரணியின் பகுதிக்குள் சென்று,"கபடி கபடி" என்று தொடர்ந்து கூறிக்கொண்டே எதிரணி வீரர்களைத் தொட்டு, பாதுகாப்பாக தனது பகுதிக்குத் திரும்ப வேண்டும். எதிரணி வீரர்கள் அவரை பிடித்து திரும்ப விடாமல் தடுக்க முயற்சிப்பார்கள். வெற்றிகரமாக திரும்பினால் அந்த வீரர் தொட்ட ஒவ்வொரு எதிரணி வீரருக்கும் ஒரு புள்ளி கிடைக்கும்.

**பாவனா:** ஆமாம் இதனால் உடல் வலிமை அதிகரிக்கிறது, மூச்சுக் கட்டுப்பாட்டை மேம்படுத்துகிறது, வேகம், சுறுசுறுப்பு மற்றும் சமநிலையை வளர்க்கிறது.

எனக்கு பம்பரம் மிகவும் பிடிக்கும். என்னுடைய தாத்தா சிறுவயதில் எனக்கு பம்பரம் செய்து கொடுப்பார். நானும் அவரும் சேர்ந்து விளையாடுவோம்.

**நிஷாந்த்:** பம்பரம் எப்படி விளையாடுவது ?

**மானசிரினி:** பம்பரத்தின் மீது கயிற்றை இறுக்கமாக சுற்ற வேண்டும். கையில் பிடித்தபடி வேகமாக தரையில் வீசி, கயிற்றை ஒரே இழுப்பில் அவிழ்க்க வேண்டும். சரியாக வீசினால் பம்பரம் தரையில் நீண்ட நேரம் சுழலும். யாருடைய பம்பரம் அதிக நேரம் சுழலுகிறது என்பதன் அடிப்படையில் வெற்றியாளர் தீர்மானிக்கப்படுகிறார்கள். சுழலும் பம்பரத்தை மீண்டும் கையில் எடுப்பது அல்லது மற்றொரு பம்பரத்தை தாக்கி விளையாடப்படுகிறது. இதன் மூலம் கை, கண் ஒருங்கிணைப்பு, கவனம் மற்றும் நுணுக்கமான இயக்கத்திறன் வளர்கின்றது.

**நித்தீஷ்வரன்:** நாம் எல்லோரும், பாரம்பரியமான நமது நாட்டு விளையாட்டுகளை பற்றி தெரிஞ்சிக்கிட்டோம். இப்போ நான் கற்றுக்கொண்டிருக்கும் தற்காப்பு கலையை பற்றி சொல்லவா?

**பாவனா:** ஆமாம்! தம்பி சொல்லு இன்றைய காலத்தில் நாம் கட்டாயம் தெரிந்து கொள்ள வேண்டியது தான்..

**நித்தீஷ்வரன்:** ஆமாம்! அக்கா நமது சிலம்பம் வீர விளையாட்டாக இருந்தது பின்பு தான் அது தற்காப்பு கலையாக மாறியது. சிலம்பம் வரலாற்றில் பல பிரிவுகளாக வளர்ந்ததாக கூறப்படுகிறது. அதில் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய முக்கிய பிரிவுகள் ஒற்றைக்கம்பு, இரட்டைக்கம்பு, சுருள்வாள், வாள் மற்றும் கேடயம், வேல், மான் கொம்பு, கை விளையாட்டு இதிலிருந்து தான் நமது தற்காப்பு கலைகளான குஸ்தி போன்ற கலைகள் பிறந்தன. சிலம்பத்தைப் போன்றே பல கலைகள் தற்காப்பு மற்றும் விளையாட்டுகளாகவும் உள்ளன. அவற்றுள் முக்கியமாக கராத்தே, குத்துச்சண்டை, ஜூடோ தற்காப்பு கலைகளாக உள்ளன.

**மானசிரினி:** நம் முன்னோர்கள் விளையாட்டுகளை வெறும் பொழுது போக்கிற்காக மட்டும் உருவாக்கவில்லை.

**பாவனா:** உண்மை தான்! விளையாடும் ஒவ்வொரு விளையாட்டிலும் பல நல்ல பயன்கள் உள்ளது. அது நம்முடைய உடலில் நல்ல மாற்றதை உருவாக்கிறது.

**நிஷாந்த்:** அப்படியென்றால் நாமும் இனி தினமும் பாரம்பரிய விளையாட்டுகளை விளையாடலாமா?

**மதுமிதா:** நல்ல யோசனை! நம் பாரம்பரிய விளையாட்டுகளை விளையாடினால் தான் நமக்கு அடுத்து வரும் நம்முடைய தம்பி, தங்கைகளுக்கும் கற்றுத்தர முடியும். இல்லையென்றால் இந்த விளையாட்டுகள் எல்லாம் அழிந்துவிடும்.

**அனைவரும்:** இனி நாம் எல்லோரும் கைபேசியிலேயே விளையாடுவதை விடுத்து நம் பாரம்பரிய விளையாட்டுகளை விளையாட நேரம் ஒதுக்க வேண்டும் சரியா ?

**நிஷாந்த்:** பாரம்பரிய விளையாட்டுகள் நமது பண்பாட்டின் அடையாளங்கள் மட்டுமல்ல, அவை குழந்தைகளின் உடல் ஆரோக்கிம், சிந்தனைத்திறன், கவனம், தைரியம், ஒற்றுமை மற்றும் சமூகப்பண்புகளை வளர்க்கும் சிறந்த கருவிகளாகவும் விளங்கின்றன.

**P. நித்தீஷ்வரன்**
13 வயது, கொருக்குப்பேட்டை



**Y. மதுமிதா**
16 வயது. கொருக்குப்பேட்டை



**K. கார்த்திக்**
14 வயது, கொருக்குப்பேட்டை



**P. பாவனா**
17 வயது, திருவொற்றியூர்



**K.. நிஷாந்த்**
17 வயது, எண்ணூர்



**C.மானசிரினி**
14 வயது, இராயபுரம்





# இதழியல் ஆசிரியர் பயிற்சி குறித்த எனது அனுபவம்

என் பெயர் ச.தர்ஷன். நான் 11 ஆம் வகுப்பு படிக்கிறேன். நான் அருணோதயா குழந்தைகள் சங்க கூட்டமைப்பில் பொருளாளராக மற்றும் சிட்டெறும்பு பேசுது இதழில் ஓவியராக பொறுப்பில் உள்ளேன்.

எனக்கு எழுவதற்கும் மற்றும் ஓவியங்கள் வரையவும் மிகவும் பிடிக்கும். ஆரம்ப காலத்தில் சிட்டெறும்பு இதழுக்கு தகவல்கள் எழுதி கொடுத்தேன். நான் எழுதிய கட்டுரைகள் மற்றும் ஓவியங்கள் இதழில் வந்தது. அதனை கண்டதும் எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. அதனால் நானும் இதழியல் ஆசிரியர் பயிற்சிக்கு சென்றேன். அப்பயிற்சி எனக்கு கிடைத்த முதல் பயிற்சி ஆகும்.



நான் சென்ற முதல் பயிற்சி அடையாரில் உள்ள இளையோர் விடுதியில் நடந்தது. அங்கு இரண்டு நபர்கள் வந்து எனக்கு ஒரு புத்தகத்தின் வடிவமைப்பு மற்றும் ஒரு கதையை எப்படி எழுதலாம் என கற்றுக் கொடுத்தார்கள்.

புது அனுபவங்கள் மற்றும் புது நண்பர்கள் எனக்கு கிடைத்தார்கள். இந்த பயிற்சியில் நான் ஒரு ஓவியராக தேர்ந்தெடுக்கப்பட்டேன். என்னுடைய பெயர் புத்தகத்தின் முதல் பக்கத்தில் வந்தது எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. எனவே நான் நன்கு பயிற்சி எடுக்க விரும்பி மீண்டும் திருப்போரூரில் நடைபெற்ற இதழியல் பயிற்சிக்கு சென்றேன். இந்த இடம் எங்களின் பயிற்சிக்கு ஏற்றதாகவும் நல்ல ஒரு பசுமையான சூழ்நிலையில் அமைந்திருந்தது.

திரு.சரவணன் பயிற்சியாளர் அவர்கள் அளித்த பல புதிய தகவல்கள் கற்க எனக்கு வாய்ப்பாக இருந்தது. இந்த பயிற்சி எனக்கு நல்ல தெளிவினை ஏற்படுத்தியது.அதில் குறிப்பாக ஒரு கதையை உருவாக்கும் வழிமுறைகளை பற்றி நான் தெரிந்து கொண்டேன்.

IPS – Introduction- Problem -solution (அறிமுகம்- சிக்கல்- தீர்வு) இந்த முறையில் கதையை எழுத வேண்டும் என விளக்கம் அளித்தார்.

எங்கள் அனைவரையும் புதிய கதையை உருவாக்க சொன்னார். இதனைத் தொடர்ந்து ஒரு நபரை எப்படி நேர்காணல் எடுப்பது என்பது குறித்தும் அவருடைய அனுபத்தை எடுத்து கூறினார். பிறகு எங்களை குழுக்களாக பிரித்து ஒரு தலைப்பினை கொடுத்து செய்தியினை உருவாக்க சொன்னார். (எ.கா) பள்ளி ஆண்டு விழாவில் 47 குழந்தைகள் திடீர் மயக்கம் என்று சொன்னார். நாங்களும் அதை செய்து காண்பித்தோம். அதற்கு பாராட்டும் தெரிவித்து எங்களின் குறைகளை சுட்டிகாட்டி விளக்கம் கொடுத்தார். இந்நிகழ்வும் ஒரு நல்ல அனுபவமாக இருந்தது. பல கேள்விகள் எங்களுக்கு தெளிவான விளக்கமும் கிடைத்தது. அடுத்த நாள் எங்களின் சிட்டெறும்பு பேசுது இதழுக்கான தலைப்பினை ஒட்டி ஓவியங்கள் மற்றும் தகவல்கள் எழுதி கொடுத்தோம். மீண்டும் இப்பயிற்சியின் இறுதியில் ஓவியராக நான் தேர்ந்தெடுக்கப்பட்டேன். அந்த நிமிடம் எனக்கு மிகவும் மகிழ்சியாக இருந்தது. இந்த தகவலை எங்கள் வீட்டில் என்னுடைய பெற்றோர் மற்றும் சகோதரிகளிடம் சொல்லி மகிழ்ந்தேன். இந்த வாய்ப்பு கொடுத்த அருணோதயா அமைப்பிற்கு எனது நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

S. தர்ஷன்
16 வயது, எண்ணூர்



## துணுக்கு

விளையாட்டு என்பது பொழுது போக்கு மட்டுமல்ல ! குழந்தையின் வளர்ச்சிக்கான அடித்தளம்!

குழந்தைகளுக்கு விளையாட்டு நேரம் கொடுப்போம்! அவர்களின் கனவுகளுக்கு சிறகுகள் கொடுப்போம்!

# நானும் பயிற்சியாளர்

அனைவருக்கும் வணக்கம். என்னுடைய பெயர் B.யஷ்வந்த் நான் எண்ணூர் இந்திராகாந்தி குப்பம் குழந்தைகள் சங்கத்தின் பகுதி தலைவர் மற்றும் அருணோதயா குழந்தைகள் சங்க கூட்டமைப்பின் துணை செயலாளராக பொறுப்பில் இருகின்றேன். என்னுடைய இந்த வளர்ச்சிக்கு காரணம் அருணோதயா குழந்தைகள் சங்கத்தில் நான் பெற்ற பயிற்சிகள் தான்.

நான் இளம் வழிநடத்துனராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு பல்வேறு பகுதிகளுக்கு சென்று ஒரு நாள் திட்டமிடல் பயிற்சி முகாம்களை நடத்தும் சிறந்த வாய்ப்பும் எனக்கு கிடைத்தது. நானும் ஒரு பயிற்சியாளராக வளர்ந்துள்ளேன் என நினைக்கும் பொழுது மிகவும் மகிழ்சியாகவும், பெருமையாகவும் உள்ளது. நான் குழந்தைகள் சங்கத்தில் உறுப்பினராக சேர்ந்து நான்கு ஆண்டுகள் ஆகின்றன. குழந்தைகள் சங்கத்தில் நான் சேர்ந்த ஆரம்ப காலத்தில் மிகவும் தயக்கத்துடனும், பயத்துடனும் இருப்பேன். எந்த நிகழ்விலும் பங்கேற்க யோசிப்பேன். கூட்டத்தில் நின்று பேசுவது எனக்கு பயமாக இருக்கும்.

பிறகு அருணோதயா பணியாளர்கள் என்னை அனைத்து நிகழ்விலும் பங்கேற்க வாய்ப்பு கொடுத்தார்கள். அதன் மூலம் குழந்தைகள் தொடர்பான அனைத்து சட்டங்கள், தகவல்கள், மற்றும் உரிமைகள் குறித்து தெரிந்து கொண்டதனால் எனக்கு இருந்த தயக்கமும் பயமும் குறைந்தது. மேலும் நான் அதிகமாக கற்றுக் கொள்ள ஆரம்பித்தேன். பல நிகழ்வுகளை நான் முதலில் பங்கேற்று பொறுப்புகள் எடுத்து செய்ய ஆரம்பித்தேன்.

தற்போது குழந்தைகள் சங்க இளம் வழிநடத்துனராக தேர்வு செய்யப்பட்டு ஒரு நாள் திட்டமிடல் பயிற்சி முகாமில் நானும் ஒரு பயிற்சியாளராக உருவாகியுள்ளேன். தற்போது எனக்குள் ஏற்பட்ட மாற்றத்தினை என்னால் நன்கு உணரமுடிகிறது.

அனைவரின் முன்னிலையிலும் சத்தமாகவும், தைரியமாகவும் பேச முடியும். என்னுடைய குழந்தைகள் சங்க குழந்தைகளுக்கு நான் வழிகாட்டியாகவும் முன்மாதிரியாகவும் உள்ளேன். நானும் ஒரு பயிற்சியாளர் என கூறுவதில் மகிழ்ச்சியாக உள்ளது.

இந்த அளவிற்கு என்னால் மாற முடியும் என நான் எதிர்பார்க்கவில்லை. என்னுடைய படிப்பிலும் நான் கவனமாக படித்து என் கனவினை கட்டாயம் அடைவேன்.

இந்த மாற்றத்திற்கு காரணமான நம் அருணோதயா பணியாளர்கள் அனைவருக்கும் எனது நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

**B. யஷ்வந்த்**
16 வயது, எண்ணூர்



## கவிதை!

## விளையாட்டு உலகம்....

ஓட்டத்தில் வேகம்
உள்ளத்தில் தாகம்
வெற்றியை நோக்கி
வீரநடை போடுவோம்!
குதித்து விளையாடி
கூடி மகிழ்ந்தாடி
நட்பையும் நம்பிக்கையும்
நாள்தோறும் வளர்ப்போம்!

## குழந்தையின் உரிமை

விளையாடுவது குழந்தையின் உரிமை
விளையாட்டே குழந்தையின் மகிழ்ச்சி!
ஓடி ஆடி நண்பர்களுடன்,
உருவாகட்டும் இனிய நினைவு!
புத்தகம் மட்டும் போதாது,
விளையாட்டும் வேண்டும்!
ஆரோக்கியமான குழந்தைகளால்
அழகான உலகம் வேண்டும்!



**L.. யுவராணி**
17 வயது, திருவொற்றியூர்

# பாரம்பரியத்திலிருந்து உலக அரங்கம் வரை - எங்கள் கேரம்

**முன்னுரை :**

வணக்கம் நண்பர்களே தற்போதயை நவீன உலகில் மிகவும் பிரபல விளையாட்டுகளில் கேரம் விளையாட்டும் ஒன்று. ஆனால் அது எங்கு இருந்து வந்தது? எங்கு எப்படி பரவியது என்றும் யாருக்கும் தெரியாது அது குறித்து இந்த கட்டுரையில் நாம் அறிவோம்.

**கேரத்தின் வரலாறு**

கேரம் விளையாட்டு இந்திய துணைக் கண்டத்தில் தோன்றியதாகப் பொதுவாகக் கருதப்படுகிறது. சுமார் 18 மற்றும் 19 ஆம் நூற்றாண்டுகளில் இந்தியாவில் அரச குடும்பங்களும் பொது மக்களும் இந்த விளையாட்டை விளையாடியதாக வரலாற்றுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. பின்னர் இந்த விளையாட்டு இலங்கை, பாகிஸ்தான், வங்கதேசம், நேபாளம், மாலத்தீவு உள்ளிட்ட தெற்காசிய நாடுகளுக்கும் பரவியது. இன்று உலகின் பல நாடுகளில் கேரம் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றது.

சர்வதேச கேரம் சம்மேளனம் **(International Carrom Federation)** உருவாக்கப்பட்ட பிறகு கேரம் உலக சர்வதேச விளையாட்டாக அங்கீகாரம் பெற்று உலகளவில் இன்று பிரபலமடைந்தது.

**மற்ற நாடுகளுக்கு பரவுதல்:**

- பிரிட்டிஷ்காரர்கள் ஆட்சிக் காலத்தில் நமது இந்தியாவில் பணியாற்றிய அதிகாரிகள் மற்றும் வணிகர்கள் கேரம் விளையாட்டை அறிந்து அதை இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு அறிமுகப்படுத்தினார்கள்.
- வேலை வாய்ப்பு மற்றும் வணிக காரணங்களுக்காக இந்தியர்கள் பல நாடுகளுக்குக் குடிபெயர்ந்தனர். அவர்கள் கேரம் விளையாட்டையும் கொண்டு சென்றனர். இதன் மூலம் தெற்காசிய, மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பாவின் சில பகுதிகளில் கேரம் பிரபலமடைந்தது.
- கேரம் விளையாட்டிற்காக தேசிய மற்றும் சர்வதேச அளவில் போட்டிகள் நடத்தப்பட்டன. இதனால் உலக நாடுகள் இந்த விளையாட்டை அறிந்து தங்கள் நாடுகளிலும் விளையாடத் தொடங்கினார்கள்.
- சர்வதேச கேரம் விளையாட்டு சம்மேளனம் உருவான பிறகு உலக நாடுகளில் கேரம் போட்டிகள் நடத்தப்பட்டு விதிமுறைகள் ஒரே மாதிரியாக அமைக்கப்பட்டன. இதனால் கேரம் உலகளவில் அங்கீகாரம் பெற்றது.
- ஊடகங்கள், இணையதளங்கள் மூலம் கேரம் பற்றிய தகவல்கள், பயிற்சிகள் வீடியோக்கள் மற்றும் போட்டிகள் உலகம் முழுவதும் பரவின.

**விளையாட்டின் அடிப்படை விதிகள் :**

- 2 அல்லது 4 பேர் விளையாடலாம். ஸ்டிரைக்கரை விரலால் தட்டி காயின்களை பைகளுக்குள் அனுப்ப வேண்டும்.
- சிவப்பு ராணியை எடுத்த பிறகு, அடுத்த அடியில் ஒரு காயினை செலுத்தி அதனை உறுதிப்படுத்த வேண்டும்.
- அதிக மதிப்பெண் பெறும் வீரர் வெற்றி பெறுவார்.



C.Thanshilka

### கேரம் விளையாடுவதால் கிடைக்கும் நன்மைகள்

- கவனத்திறன் அதிகரிக்கும்
- கண் - கை ஒருங்கிணைப்பு மேம்படும்
- பொறுமை மற்றும் திட்டமிடும் திறன் வளரும்
- மனஅழுத்தம் குறையும்
- குடும்பத்தினருடனுடம், நண்பர்களுடன் மகிழ்ச்சியாக நேரம் செலவிட உதவும்
- போட்டி மனப்பான்மை மற்றும் விளையாட்டு ஒழுக்கம் வளர்க்கும்.

### முடிவுரை:

கேரம் என்பது வெறும் பொழுதுபோக்கு விளையாட்டு மட்டுமல்ல அது ஒரு சிந்தனைத்திறன், கவனத்திறன், துல்லியம் மற்றும் ஒழுக்கத்தை வளர்க்கும் சிறந்த அறிவுப் பயிற்சி விளையாட்டாகும். குடும்பத்தினரும் நண்பர்களும் ஒன்றாக இணைந்து மகிழ்ச்சியுடன் விளையாட ஏற்ற காலத்தால் அழியாத பாரம்பரிய உட்புற விளையாட்டாக கேரம் இன்று வரை தனது சிறப்பை தக்கவைத்துள்ளது.

**P. உதயபிரியன்**
17 வயது, கொருக்குப்பேட்டை



## வாழ்த்துகிறோம்

அருணோதயா குழந்தைகள் சங்க கூட்டமைப்பில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொது தேர்வில் வெற்றி பெற்ற குழந்தைகளை வாழ்த்துகிறோம்..

| 10TH STD STUDENT RESULT-20.05.2026 | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| S.No | AREA | TOTAL NO OF STUDENTS | Mark | | | ZONE TOTAL |
| | | | 400+ | 300+ | 200+ | |
| 1 | KORUKKUPET | 57 | 9 | 25 | 15 | 49 |
| 2 | TIRUVOTTIYUR | 21 | 4 | 7 | 5 | 16 |
| 3 | ENNORE | 67 | 8 | 24 | 22 | 54 |
| 4 | ROYAPURAM | 4 | 1 | 1 | 1 | 3 |
| **TOTAL** | | **149** | **22** | **57** | **43** | **122** |

| 12TH STD STUDENT RESULT-08.05.2026 | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| S.No | AREA | TOTAL NO OF STUDENTS | Mark | | | | ZONE TOTAL |
| | | | 500+ | 400+ | 300+ | 200+ | |
| 1 | KORUKKUPET | 59 | 7 | 28 | 17 | 5 | 57 |
| 2 | TIRUVOTTIYUR | 13 | 0 | 6 | 5 | 2 | 13 |
| 3 | ENNORE | 40 | 3 | 9 | 18 | 8 | 38 |
| 4 | ROYAPURAM | 2 | 1 | 0 | 1 | 0 | 2 |
| **TOTAL** | | **114** | **11** | **43** | **41** | **15** | **110** |

பொதுத்தேர்வில் தேர்ச்சி பெறாத குழந்தைகளை மறு தேர்வினை எழுதுவதற்காக ஊக்கப்படுத்தி அருணோதயா குழந்தைகள் சங்கம் மற்றும் பணியாளர்களின் உதவியுடன் வழிநடத்தப்படுகிறார்கள்.

# கல்வியில் சாதனை படைத்த நம் செல்வங்கள் சிலரின் அனுபவங்கள்



**மு.சு யாசிகா**
10 ஆம் வகுப்பு
**473/500.**

அனைவருக்கும் வணக்கம்,

எனது பெயர் மு. சு யாசிகா, நான் ஸ்ரீ இராமகிருஷ்ணர் மடம் விவேகானந்தர் நூற்றாண்டுப் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, தங்க சாலை பள்ளியில் படிக்கிறேன். நான் இப்போது 11 ஆம் வகுப்பு படித்து வருகிறேன். எங்களுடைய குடும்பம் பொருளாதாரத்தில் பின் தங்கிய குடும்பம். அருணோதயாவில் 2021 ஆம் ஆண்டு எங்கள் பகுதியில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பு மூலம் குழந்தைகள் சங்கத்திற்கு அறிமுகமானேன்.



ஒரு நாள் திட்டமிடல் பயிற்சி முகாமில் நான் பங்கேற்றேன். இந்த பயிற்சியில் குழந்தைகள் உரிமைகள் மற்றும் பங்கேற்பு குறித்த பல தகவல்கள் நான் தெரிந்து கொண்டேன்.

அப்பயிற்சியில் நான் கற்ற தகவல் மூலம் எனது திறமையை பல இடங்களில் வெளிப்படுத்தியதன் மூலம் பல முக்கிய பொறுப்பாளராக என்னை குழந்தைகள் சங்க உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்தார்கள். நான் மேலும் குழந்தைகள் நகரசபையின் பிரதிநிதியாக தேர்வு செய்யப்பட்டேன். பின்னர் அருணோதயா குழந்தைகள் சங்கம் மூலம் பல பயிற்சிகளை நான் பெற்றுள்ளேன்.

இதனால் என்னுடைய திறமைகளை நான் வெளிப்படுத்த அதிக வாய்ப்புகள் கிடைத்தது. மற்றும் good city என்னும் நிகழ்வில் பங்கேற்று வீதி நாடகம் நடித்துள்ளேன்.

எனது குடும்பத்தில் எங்க அம்மா வீட்டில் இருக்கிறார். எங்க அப்பா குங்குமம் கம்பேனியில் வேலை செய்கிறார். எங்களது குடும்ப வருமானம் மிக குறைவு. எங்க அப்பாவிற்க்கு நான் நன்றாக படிக்க வேண்டும் என்பது தான் அவருடைய இலட்சியம். இதுவே என்னுடைய இலட்சியமும் ஆகும்.

இந்த ஆண்டு நடைபெற்ற பள்ளி பொதுதேர்வில் நான் **473/500** மதிப்பெண் எடுத்துள்ளேன். நான் தான் எனது பள்ளியில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவி. அதனால் எனக்கு பள்ளியில் சான்றிதழ் வழங்கினார்கள்.

என்னுடை பெற்றோருக்கு இந்நிகழ்வு பெருமையை தேடித் தந்தது. இந்த மதிப்பெண் பெற்றதினால் பள்ளியில் என்னுடைய பள்ளி கட்டணத்தை குறைத்துள்ளனர்.

என்னுடைய 11 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண் எடுப்பேன். என் இலக்கை அடைய எனக்கு வழிதுணையாக இருந்து வழிநடத்தும் எனது பெற்றோருக்கும், நமது அருணோதயா பணியாளர்கள் அனைவருக்கும் எனது நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

**சிறிய கவிதை**

### "விளையாட்டு"

ஓடுவோம் .. ஆடுவோம்...
ஒன்றாகக் கூடுவோம்....
சிரிப்போம்..மகிழ்வோம்...
சிறகுகள் விரிப்போம்!

விளையாட்டில் நட்பு!
விளையாட்டில் நலம்!
விளையாட்டில் தைரியம்!
விளையாட்டில் வளம்!



# Hard work that made dreams come ture -
## கனவுகளை நனவாக்கிய கடின உழைப்பு

**M.Aisha Fatima.**
10th Std.
455/500



Honestly, this result is not only my achievement. It belongs to my parents as well. My parents went through many struggles to support my education. They made sacrifices, worked hard, and always encouraged me, even when things were difficult. Seeing their efforts made me realize that I should not waste the opportunity they gave me.

Whenever I made mistakes, I learned from them and corrected them.

There were days when I felt tired orstressed, but I remembered my parents' hard work and sacrifices that through they gave me, motivated to continue.

So if people ask me the secret behind my marks, I would say it is consistency, practice, and the blessings and sacrifices of my parents. These 455 out of 500 is not just my score. It is the result of their support, my hard work, and especially Allah's grace.

I am truly grateful to my parents, teachers, and everyone who encouraged me.

Thank you,

**மு.ஸ்ரீமதி**
12ஆம் வகுப்பு
577/ 600



நான் கொருக்குப்பேட்டை கார்னேஷன் நகர் பகுதியில் வசித்து வருகிறேன். நான் 12 ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் 577/600 மதிப்பெண் எடுத்தது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது.இந்த மகிழ்ச்சிக்கு காரணம் எனது பெற்றோர்கள் மற்றும் என்னுடைய பள்ளி ஆசிரியர்கள் தான் அவர்களுக்கு நான் என்றும் நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளேன். எனது குடும்ப சூழ்நிலை பொருளாதாரத்தில் மிகவும் பின் தங்கியது.

எனது அப்பா கார் ஓட்டுனர், மாதத்திற்க்கு ஒரு முறை தான் வீட்டிற்கு வருவார். அந்த வருத்தம் எனக்கு இருந்தாலும் அவருடைய கஷ்டத்தினை புரிந்து கொண்டு என்னுடைய படிப்பில் மிகுந்த கவனத்துடன் படிக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கு இருந்தது. எனவே படிப்பில் முழு கவனம் செலுத்தி நான் நன்றாக படித்து வந்தேன். என்னுடைய அம்மா அருணோதயா மூலம் நடத்தப்பட்ட தையல் பயிற்சி வகுப்பில் தையல் கற்றுக்கொண்டு, தற்போது வீட்டிலேயே துணி தைத்து கொடுத்து சிறு வருமானம் ஈட்டுகிறார்.

நான் இந்த சூழ்நிலையில் வளர்ந்ததால் என்னுடைய இலக்கு கட்டாயம் நன்றாக படித்து நல்ல மதிப்பெண் எடுக்கவேண்டும் என்பதே. இதற்காக எந்த மாலைநேர வகுப்பிற்க்கும் நான் சென்றதில்லை. அதற்க்கான வசதியும் எனக்கு இல்லை. நான் வீட்டிலேயே தான் படித்தேன். ஆரம்பத்தில் சில பாடங்கள் எனக்கு மிகவும் கடினமாக இருந்தது. அதனால் ஆசிரியரின் ஆலோசனையின் படி தொடர்ந்து பயிற்சி செய்தேன். இதன் மூலம் அந்த சிரமங்கள் அனைத்தையும் வெற்றிகரமாக கடந்து வந்தேன். அருணோதயா குழந்தைகள் சங்கத்தில் இரண்டு ஆண்டுகளாக நான் உறுப்பினராக இருக்கிறேன். எனது இந்த வெற்றிக்கு எனது அம்மா, ஆசிரியர்கள் மிகுந்த பலமாகவும் இருந்தார்கள். அருணோதயா குழந்தைகள் சங்கத்தின் வழிகாட்டுதலும் எனக்கு மேலும் ஆதரவாக இருந்தது.

தற்போது அண்ணா பல்கலைகழகத்தில் **B.Tech counseling** வந்துள்ளது. எனது கனவு **B.Tech**பட்டபடிப்பு படித்து **IT** நிறுவனத்தில் பணிபுரிய வேண்டும். எனது கனவினை அடைய கட்டாயம் நான் நன்கு உழைப்பேன். எனது தடைகளை வெற்றி படிக்கட்டாக மாற்றி வெற்றி அடைவேன்.

# “இணையத்தில் பாதுகாப்பாக இணைவது எங்கள் உரிமை”
## FCMRP– 9ஆம் மாநில மாநாடு - 2026

பங்கேற்பு உரிமைக்கான குழந்தைகள் இயக்கங்களின் கூட்டமைப்பின் 9ஆம் மாநில மாநாடு மே 27, 28 ஆகிய தேதிகளில் ஏற்காட்டில் உள்ள Don Bosco The Retreat பயிற்சி இல்லத்தில் நடைபெற்றது. அருணோதயா குழந்தைகள் சங்க கூட்டமைப்பின் சார்பாக துணைப்பொருளாளர் செல்வி.யுவராணி, பொதுக்குழு உறுப்பினர் செல்வன்.சபரிராஜன், இளம் வழிநடத்துனர் செல்வி.ஆயிஷாபாத்திமா,செல்வன்.நிஷாந்த், அருணோதயா குழந்தைகள் சங்க வழிநடத்துனர் திருமதி. செல்வி ஆகியோர் இம்மாநாட்டில் பங்கேற்றனர்.




“இணையத்தில் பாதுகாப்பாக இணைவது எங்கள் உரிமை” என்னும் தலைப்பில் மாநாடு நடைபெற்றது. இதில் 14 மாவட்டங்களில் இருந்து 35 குழந்தைகள் பங்கேற்றனர். 2 நாட்கள் நடைபெற்ற மாநாட்டில் அருணோதயா குழந்தைகள் சங்க சார்பில் இளம் வழிநடத்துனராக தேர்வு செய்யப்பட்ட செல்வி.ஆயிஷா பாத்திமா இணையதள பாதுகாப்பு குறித்து மற்ற குழந்தைகளுக்கு பயிற்சி அளித்தார். இது புதிய அனுபவமாக இருந்ததாகவும், நல்லதொரு வாய்ப்பு கிடைத்ததாகவும் செல்வி. ஆயிஷா பாத்திமா பகிர்ந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினராக கலந்துக் கொண்ட திரு. காஸ்மீர் ராஜா (உறுப்பினர் - தமிழ்நாடு குழந்தைகள் பாதுகாப்பு ஆணையம்) அவர்கள் இம்மாநாட்டினை துவக்கி வைத்து குழந்தைகளுக்கான விழிப்புணர்வு தகவலை வழங்கினார். இந்நிகழ்வினை தொடர்ந்து மாநாட்டில் குழந்தைகளுக்கு “நெட்டிசன்” பாதுகாப்பான இணையதளம் குறித்த தகவல்கள் தொகுக்கப்பட்ட பயிற்சி கையேடும், விளப்பர சுவரொட்டிகளும் வெளியிடப்பட்டது. அடுத்த அமர்வாக “நெட்டிசன்” இணையதள பாதுகாப்பு குறித்து CCRD நிவனத்திலிருந்து திரு ஜோசப் அவர்கள் குழந்தைகளுக்கு விளக்கம் அளித்தார்.



M. ஆயிஷா பாத்திமா
15 வயது, தண்டையார்பேட்டை

மேலும் அருணோதயா சார்பில் இம்மாநாட்டில் பங்கேற்ற நிர்வாக குழு உறுப்பினர் செல்வி. யுவராணி அவர்கள், குழந்தைகளுக்கான தேர்தலில் தேர்தல் ஆணையமாக செயல்பட்டு 2026 ஆண்டு புதிய நிர்வாக குழுவிற்கான தேர்தல் நடத்தினார். தேர்தலைத் தொடர்ந்து நமது குழந்தைகளின் கோரிக்கைகள் தொகுத்து தயாரிக்கப்பட்டது.

அன்று மதியம் குழந்தைகள் அனைவரும் பக்கோடா பாயின்ட், பூ கண்காட்சி போன்ற இடங்களுக்கு சுற்றுலா சென்றிருந்தனர். இந்த சுற்றுலா நம குழந்தைகளுக்கு மிகுந்த மகிழ்ச்சி அளித்தது. அன்று இரவு குழந்தைகள் தங்கள் திறன்களை வெளிபடுத்தும் வகையில் மாவட்ட கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

மறுநாள் மீளாய்வுடன் மாநாடு தொடங்கியது. பின்னர் தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய நிர்வாக குழுவிற்கு பதவி ஏற்பு விழா நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து இந்த ஆண்டு செயல்திட்டம் இளம் வழிநடத்துனர்களின் உதவியுடன் குழந்தைகள் திட்டமிட்டனர். மேலும் இம்மாநாட்டின் நிறைவு நிகழ்வில் புதிய நிர்வாக குழு உறுப்பினர்கள் கோரிக்கைகளை அறிமுகம் செய்து சமர்பித்தனர்.

குழந்தைகள் உரிமையை உறுதி செய்யும் கூட்டமைப்பு பொறுப்பாளர்கள், மாநாட்டின் அனைத்து விதமான செயல்பாட்டுகளிலும் குழந்தைகளுக்கு முதுகெலும்பாய் இருந்து செயல்பட்டார்கள்.

இம்மாநாடு குழந்தைகளுக்கு தெளிவான சிந்தனையும், புரிதலையும் ஏற்படுத்தியும், அனைத்து குழந்தைகளுக்கும் தேவையான புதிய நண்பர்கள், புதிய அனுபவங்கள் கிடைத்தது.

## இதழியல் பயிற்சியில் குழந்தைகள் உருவாக்கிய கதை நன்றி மறவா ஏலியன்....

ஒரு அழகான கிராமத்தில் ஒரு விவசாயி பயிர்களை பயிரிட்டு விவசாயம் பார்த்து வந்தார். திடீர் என ஒரு நாள் விண்கலம் ஒன்று அவரது நிலத்தின் அருகில் விழுந்தது. இதிலிருந்து ஒரு ஏலியன் காயப்பட்டு வெளியே வந்தான். அதனை கண்டு விவசாயி யார் நீ? உனக்கு என்ன ஆச்சு என கேட்டார். அதற்கு அந்த ஏலியன் நான் வேற்று கிரகவாசி என்று சொன்னது. அதற்கு அந்த விவசாயி உனக்கு உடல்நிலை சரியில்லை. இப்போது நீ எங்கும் போக வேண்டாம். உனக்கு உடல் சரியான பின்னர் உன்னுடைய கிரகத்திற்கு போ! அதுவரை என்னுடைய வீட்டில் நீ தங்கிக்கொள் என கூறினார்.



அதற்கு அந்த ஏலியன் சரி என சொல்லி விவசாயின் வீட்டில் சிறிது காலம் தங்கி அதனுடைய உடல் காயங்கள் சரியான பின் மீண்டும் அது தன்னுடைய கிரகத்திற்கு சென்றது. ஏலியன் சென்ற பின் மீண்டும் விவசாயி தன்னுடைய விவசாயத்தினை தொடங்கினார்.

சிறிது காலம் சிறப்பாக நடந்த விவசாயம் நாளடைவில் பயிர்கள் அழுகி விவசாயம் செய்ய முடியாமல் விவசாயி மிகுந்த நஷ்டத்தில் இருந்தார்.

மறுபடியும் ஏலியன் விவசாயியை பார்க்க பூமிக்கு வந்தது. விவசாயியை சந்தித்து எப்படி இருக்க என்று கேட்டது. அதற்கு விவசாயி நான் நலமாக இருக்கிறேன் என சொன்னார்.

ஆனால் அவருடைய வார்த்தையில் எந்த ஒரு மகிழ்ச்சியும் இல்லை என்பதை ஏலியன் உணர்ந்தது. உடனே அங்கிருந்த பயிர்கள் வாடியிருப்பதை கண்டு ஏலியன் அந்த விவசாயின் கவலைக்கான காரணத்தினை கண்டு பிடித்தது. அந்த விவசாயிக்கு நன்றி செலுத்தும் விதமாக நெற்பயிர்களை தங்கமாக மாற்றி விவசாயியை மிகவும் சந்தோஷப்படுத்தியது. இதனைக் கண்டு விவசாயி மகிழ்ச்சி அடைந்தார். இருவரும் இணைந்து அவர்களின் அன்பினை பகிர்ந்து கொண்டனர்.....



S. முபாரக்
14 வயது, திருவொற்றியூர்

## சட்டமன்ற தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை சந்தித்ததில் எனது அனுபவம்

அனைருக்கும் வணக்கம். என் பெயர் கல்பனா. நான் திருவொற்றியூரில் உள்ள குழந்தைகள் சங்கத்தில் உறுப்பினராக உள்ளேன். நானும் எனது குழந்தைகள் சங்க உறுப்பினரும் இணைந்து எங்கள் கோரிக்கைகளை தொகுத்து ஒரு புத்தகமாக எழுதி எங்கள் பகுதியில் போட்டியிடும் தமிழக வெற்றி கழகம் வேட்பாளர் திரு.செந்தில்குமார் அவர்களை 09.04.2026 அன்று சந்தித்து எங்கள் கோரிக்கைகள் அடங்கிய புத்தகத்தை கொடுத்தோம். அவர் அதை பெற்றுக் கொண்டு நம் தொகுதியில் இதுவரை பல பிரச்சனைகள் இருந்திருக்கலாம். ஆனால் நான் வெற்றி பெற்று வந்தவுடன் உங்கள் கோரிக்கைகள் அனைத்தையும் நான் சரி செய்து தருவேன் என எங்களுக்கு வாக்குறுதி கொடுத்தார். நாங்கள் இதுவரை அரசியல் வாதிகளையும் சந்தித்ததில்லை. இதுவே முதல்முறை, முதலில் எங்களுக்கு பயமாக இருந்தது.

பிறகு அவர் எங்களிடம் ஜாலியாக பேசி நல்ல முறையில் எங்களை அணுகினார். வெற்றி பெற்றவுடன் உங்கள் கோரிக்கை அனைத்தையும் சரி செய்து தருகிறேன் என்று கூறி எங்கள் அனைவருக்கும் அவர் சின்னமான விசில் கொடுத்து எங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தினார். நாங்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் அங்கிருந்து வந்து விட்டோம்.

இந்த சந்திப்பிற்கு பின் குழந்தைகள் அனைவரும் தேர்தல் முடிவுகள் வெளியான பின் வெற்றி பெற்ற வேட்பாளர்களை சந்தித்து வாழ்த்து தெரிவித்து பின் மீண்டும் நமது கோரிக்கைளை கொடுக்க வேண்டும் என திட்டமிட்டனர்.

நன்றி !



க.கல்பனா
12 வயது, திருவொற்றியூர்

# ஆசிரியர்கள் வாழ்த்துமடல்

அருணோதயா குழந்தைகள் சங்க கூட்டமைப்பு சார்பாக மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வெளியிடப்படும் சிட்டெறும்பு பேசுது புத்தகம் பழைய வண்ணாரப்பேட்டை பகுதியில் உள்ள அனைத்து வகை பள்ளி குழந்தைகளின் திறமைகளை வெளிக்கொணரும் வகையில் அவர்களுடைய படைப்புகள் வெளியிடப்படுவது மாணவர்களின் புகைப்படம் மற்றும் பள்ளியின் சிறப்பை வெளிப்படுத்தும் வகையிலும் இந்த சிட்டெறும்பு பேசுது இதழானது அமைந்துள்ளது. இந்த படைப்பு பழைய வண்ணாரப்பேட்டை பகுதியில் மிகப்பெரிய மாற்றத்தை உருவாக்கி கொண்டிருக்கிறது. என்பதை C.H.S மணிகண்ட தெரு, பள்ளியின் சார்பாக கூறுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். நன்றி வணக்கம்.

**திருமிகு. ரமேஷ், தலைமையாசிரியர்,**
**மணிகண்ட முதலி தெரு, இராயபுரம்**

அருணோதயா அமைப்பின் அறங்காவலர்
திருமிகு பாக்கியராஜ் ஐயா அவர்களின்
வாழ்த்து மடல்


சிட்டெறும்பு பேசுது ஜனவரி - மார்ச் 2026
இதழ் முழுவதையும் வாசித்தேன். எல்லாப் படைப்புகளும் சிறந்தவை. சிறப்பாக,
S. யுதிகா போன்ற கவிஞரின் முழக்கம்,
K. கிஷோர்த்தின் பகுத்தறிவுக் கவிதை,
P. கவிதாவின் பாட்டில் வெளிப்படும் ஆதங்கம்,
T. தாரணியின் "மௌனம் உடைத்தது" என்ற அறைகூவல்,
செய்தித்தாள் விவரங்களை ஆய்வு ஆவணமாக மாற்றிய H. செய்யது பாத்திமா என முழு இதழும் வாசகர்களின் விழிப்புணர்வு நிலையை மேம்படச் செய்கின்றது.
பிற எல்லாப் படைப்பாளிகளும் கிடைப்பச் சிக்கலுக்கு ஆணிவேர் காரணங்களைக் கட்டுரைகளாகப் பாடல்களாக வடித்திருக்கிறார்கள்.
சட்ட நுணுக்கப் பதிவும் பாராட்டுக்குரியது.
மொத்தத்தில் இந்த இதழ் காப்பாற்றப்பட வேண்டிய செய்தி மடல். அவ்வப் போது வாசித்தால் வலிவாக்கம் தரும்.
அருமையான இளம் சிந்தனையாளர்கள் எதிர்கால உண்மையான தலைமைப் பொறுப் போடு வளர்வார்கள் என்ற நம்பிக்கை பிறக்கிறது.
அருணோதயா வாழ்க! இளையோர் வாழ்க எல்லா வளங்க ளோடும்!
சிந. பாக்கியராஜ் (PROF. SJA. PACKIARAJ)
12.06.2026
சென்னை-600 029

ஐயா அவர்களுக்கு வணக்கம்,

உங்களது பொன்னான நேரத்தினை ஒதுக்கி எங்களது சிட்டெறும்பு பேசுது இதழினை வாசித்து ஒவ்வொரு கட்டுரைக்கும் தனித்தனியாக வாழ்த்து தெரிவித்தது எங்களுக்கு மிகுந்த ஊக்கத்தினை அளிக்கின்றது. உங்களது அன்பான இந்த வாழ்த்து மடலுக்கு எங்களது மனமார்ந்த நன்றியை தெரிவித்து கொள்கிறோம். இந்த பாராட்டுகளும் வாழ்த்துகளும் எங்களின் இதழை மேலும் சிறப்பாக வெளியிட எங்களுக்கு ஆர்வத்தினையும் ஊக்கத்தையும் அளிகின்றது. தங்களின் இந்த அன்பும் ஆதரவும் என்றும் தொடர விரும்புகிறோம்.

நன்றி !
ஆசிரியர் குழு












உங்கள் படைப்புகளையும், செய்திகளையும், கருத்துக்களையும்
வாழ்த்துக்களுடன் வரவேற்கிறோம்